# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2004/69 - 2017 පෙබරවාරි මස 03 වැනි සිකුරාදා - 2017.02.03

2004/69 ஆம் இலக்கம் - 2017 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 03 ஆந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி III - காணிகள்

### காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)

7 ஆம் பிரிவின் கீழான அறிவித்தல்

எனது இலக்கம்: 8/3/5/3/6.

காணி அமைச்சின் குறிப்பு இலக்கம்:4-3/9/2013/WS/693.

ஒரு பகிரங்கத் தேவைக்கு வேண்டியதான கீழ்க் காணும் காணித்துண்டுகளை எடுத்துக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார்கள் என்பதை 1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி எடுத்தல் (திருத்தச்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் (1) ஆம் உட் பிரிவின் பிரகாரம் நான் இத்தால் அறிவிக்கின்றேன்.

**எடுத்துக் கொள்ளவிருக்கும் காணியின் விபரம்:**

மத்திய மாகாணத்தில் மாத்தளை மாவட்டத்தில் மாத்தளை பிரதேச செயலாளர் பிரிவில் கொஹொன் சியபத்துவ சிறுபிரிவில் களுதாவலை வட்டார இல. 2 மந்தண்டாவல (மாத்தளை மாநகரசபை எல்லைக்குள்) கிராமத்தில் அமைந்துள்ள நில அளவையாளர் நாயகத் தினால் தயாரிக்கப்பட்ட மா/1688 பூர்வாங்க வரைபடத்தில் துண்டு இல. 1 எனக் கீழே காட்டப்பட்டுள்ள 0.1064 ஹெக்டயார் விஸ்தீரணம் மற்றும் எல்லைகளைக் கொண்ட காணித்துண்டு.

1. **துண்டு இல. 1 - காணியின் பெயர்: களுதாவலை தோட்டம்; ஆரம்ப உரிமை கோருபவர்: அப்துல் சத்தார் மொகமட் வசீர்.**

வடக்கு: வீதி, பூ.வ.மா. 383 இல் துண்டு இல. 1; கிழக்கு: பூ.வ.மா. 383 இல் துண்டு இல. 1, வீதி; தெற்கு: வீதி, அப்துல் சத்தார் மொகமட் வசீர் உரிமைகோரும் களுதாவலை தோட்டம் (உ.வ.50252); மேற்கு: அப்துல் சத்தார் மொகமட் வசீர் உரிமைகோரும் களுதாவலை தோட்டம் (உ.வ.50252), வீதி.

மேற்குறித்த காணிக்கு உரித்துப் பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்து மூலம் அதிகாரமளிக் கப்பட்ட காரியக்காரர் மூலமாக 2017 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 29 ஆந் திகதி பி.ப. 2.00 மணிக்கு, மாத்தளை பிரதேச செயலகத்தில் என்முன் தோன்றும் படியும்,

மேலும் அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணித் துண்டுகளை எடுத்ததற்கான நட்டஈடு பற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங் களையும், நட்டஈட்டுத் தொகையையும் அத்தொகை கணிக் கப்பட்ட விபரங்களையும் 2017 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 22 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்தில் முப்பிரதிகளாக எனக்கு அறிவிக்கும்படியும் இத்தால் கேட்டுக்கொள்ளப்படு கின்றனர்.

கே. பி. கே. எல். பி. மதுவந்தி,
பிரதேச செயலாளர்,
மாத்தளை.

பிரதேச செயலகம்,
மாத்தளை,
2017, சனவரி 31.

2 - 761

*இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

## திருத்தம்

### காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)

### 7 ஆம் பிரிவின் கீழான அறிவித்தல்

எனது இல.: நுவ/3/1/8/கா.எ/111/35.
காணி மற்றும் காணி அபிவிருத்தி அமைச்சின் இல.:
LD/05/2009/CEB/62.

இல. 1881/12 மற்றும் 2014.09.23 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்த மானியில் வெளியிடப்பட்ட அறிவித்தலில் சிங்கள மொழியில் 01A பக்கத்தில் தொடர் இல. 02க்கு உரிய துண்டு இல. 02 இல் விஸ்தீரணம் 0.0095 ஹெக்டயார் என்பதற்கு பதிலாக 0.0995 ஹெக்டயார் என இத்தால் திருத்தம் செய்கிறேன்.

எஸ். பீ. கே. போதிமான்ன,
பிரதேச செயலாளர்,
நுவரெலியா.

பிரதேச செயலகம்,
நுவரெலியா,
2017, சனவரி 30.

2 - 762

---

## திருத்தம்

### 1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி எடுத்தல் (திருத்தச்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)

### 7 ஆம் பிரிவின் கீழான அறிவித்தல்

எனது இல.: டீஎஸ்பீ/எல்/1/2/47.
காணி அமைச்சின் இல.: 3 J/80E/205

இலக்கம் 283/16 - 1984.02.09 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதி விசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட காணியை எடுத்தல் சட்டத்தின் 7ஆவது வாசகத்தின் கீழ், கீழ்க் குறிப்பிடப்படும் விபரங்களுக்கான அறிவித்தல்.

**பெற்றுக்கொள்ள உத்தேசித்துள்ள காணியின் விபரம் :**

அமைந்துள்ள பகுதி : சபரகமுவ மாவட்டத்தின், இரத்தினபுரி மாகாணத்தின், பலாங்கொடை பிரதேச செயலளார் பிரிவின், உடுவக்கம்பத்துவ கோரலே, துரகேகந்த என்பது துரகந்த கிராமம் என்று மாற்றப்படல் வேண்டும்.

திட்டத்தின் இலக்கம் : இ.கி.வ. 191 மேலதிக 01 என்பது இ.கி.வ. 491 மேலதிக 01 பத்திர இல. 01 என்று மாற்றப்படல் வேண்டும்.

காணியின் பெயர் : ருக்அத்தனகஹவத்த.

உரிமை கோருபவர் : டபிள்யூ. அமுனேரிஸ் என்பது கந்தெகெதர வதுகாரகே அவுனேரிஸ், துரகந்த, இராசகலை, பலாங்கொடை என்று மாற்றப்படல் வேண்டும்.

விஸ்தீரணம் : 0.504 ஹெக்டயார்.

மேற்குறித்த காணிக்கு உரித்துப் பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்து மூலம் அதிகாரமளிக் கப்பட்ட காரியக்காரர் மூலமாக 1984 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 06 ஆந் திகதி மு.ப. 10.00 மணிக்கு பலாங்கொடை செயலாளர் அலுவலகத்தில் என்னை சந்திக்க வேண்டும் என்பது 2017 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 01 ஆந் திகதி மு.ப. 10.00 மணிக்கு பலாங்கொடை செயலாளர் அலுவலகத்தில் என்னை சந்திக்க வேண்டும் என்று மாற்றப்படல் வேண்டும்.

மேலும் 1984.03.28 ஆந் திகதிக்கு முன் என்பது 2017.02.22 ஆந் திகதிக்கு முன் என்று திருத்தம் செய்யப்படல் வேண்டும். அத்துடன் அன்றைய நாளுக்கு முன் அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணித் துண்டுகளை எடுத்ததற்கான நட்டஈடு பற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும், நட்ட ஈட்டுத் தொகையையும் அத்தொகை கணிக்கப்பட்ட விபரங்களையும் இரு பிரதிகளாக எனக்கு அறிவிக்கும்படியும் இத்தால் கேட்டுக்கொள்ளப்படு கின்றனர்.

சம்பிக நிரோஸ் தர்மபால,
பிரதேச செயலாளர்,
பலாங்கொடை.

பிரதேச செயலகம்,
பலாங்கொடை,
2017, சனவரி 30.

2 - 763

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் அச்சிடப்பட்டது.